உ

# அருள்மிகு குறிஞ்சியாண்டவர் திருக்கோயில்

கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்,

(பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயில்)

## திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா அழைப்பிதழ்




விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணை முருகாவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிருதோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும் செங்கோடன் மயூரமுமே

- கந்தர் அலங்காரம்

**22.05.2017 திங்கட்கிழமை**

**காலை 9.00 மணிக்குமேல் 9.25 மணிக்குள்**

## மெய்யன்புடையீர்!

இன்ற வழிபாடு ஒன்றே இடும்பை இலாத இன்பத்தை வழங்கி நல்வாழ்வை பெறச்செய்வது. மக்கள் வாழ்வு முதன்முதல் தொடங்கப்பட்ட இடம் மலை. தமிழ் மக்கள் மலையும் மலை சார்ந்த இடத்தையும் குறிஞ்சி நிலமென்று கூறினார்கள். வானத்தை தழுவும் மலை, அதில் வளைந்து வளைந்து வரும் அழகான வெள்ளருவி, வண்ண, வண்ண மலர்க்கூட்டம், மேகத்தின் அழகு, வானின் இடியோசை, அதற்கென ஆடும் மயில் கூட்டம், இத்தனை நிறைந்த மலை உலகத்தை தொல்காப்பியம் 'சேயோன்மேய மைவரை உலகம்' என மகிழ்ந்து பாராட்டுகிறது. இந்த இயற்கை ஈந்த இனிய தெய்வம் ஈராறு கைக்கொண்ட இனிய முருகன் ஆவான்.

மலையில் வாழ்ந்த மக்கள் தங்கள் கடவுளைக் 'குறிஞ்சிக்கிழான்' என்றே குறிப்பிட்டனர். 'குன்றுதோ றாடல் மேவு பெருமாளே' என்று திருப்புகழும், 'குன்று தோறாடலும் நின்ற தன் பண்பே' என்று திருமுருகாற்று படையும், 'முருகர் மா மலை' என்று ஐங்குறுநூறும் முருகனுக்குரிய முதன்மை இடம் மலைப்பகுதி என்று தெரிவிக்கின்றன.

tnhrce.org

முருகன் குறிஞ்சி நிலத் தெய்வம். கையில் வேல் கொண்டு மெய்யில் எழில் கொண்டு மலை தந்த மயில் மீதில் அமர்ந்து எழிலால் எண்ணத்தை கவரும் முருகப்பெருமான் மலைகளின் இளவரசி என்று அழைக்கப்படும் இயற்கை எழில் கொஞ்சும் கொடைக்கானல் மலையில் அருள்மிகு குறிஞ்சியாண்டவர் திருக்கோயிலில் குறிஞ்சியாண்டவர் எனும் திருநாமம் கொண்டு பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி போலவே மேற்கு திசை நோக்கி அடியார்களுக்கு அருள்பாலித்து வருகின்றார்.

"உருள்பூந் தண் தார் புரளும் மார்பினன்" என்றும்
"மணம் கமழ் தெய்வம்" என்றும்

திருமுருகாற்றுப்படை முருகனைப் போற்றுவதற்கேற்ப ஆண்டு தோறும் இத்திருக்கோயிலில் மலர் வழிபாட்டு விழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலர் இத்திருக்கோயில் வளாகத்தில் இயற்கையாகவே அமைந்திருப்பது ஒரு தனிச்சிறப்பாகும்.

முன்னம் முருக பக்தையான ஆங்கிலேயப் பெண்மணியால் கட்டப்பட்டதாக கூறப்படும் இத்திருக்கோயில் முழுவதும் தற்பொழுது சிற்ப ஆகம முறைப்படி திருத்தமுற திருப்பணி செய்யப்பட்டு புத்தாக்கம் பெற்றுள்ள இத்திருத்தலத்தின் **திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா**

நிகழும் மங்களகரமான ஹேவிளம்பி வருடம், திருவள்ளுவராண்டு 2048, **வைகாசி மாதம் 8-ம் தேதி (22.05.2017) திங்கட்கிழமை** ஏகாதசி திதியும், ரேவதி நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.00 மணிக்குமேல் 9.25 மணிக்குள் மிதுன லக்னத்தில், சுபவேளையில் வையகமும், வானகமும் வாழ்த்திசைத்திட கோலாகலமாக நிகழ்வுற திருவருள் கூட்டுவித்துள்ளது.

இவ்வினிய விழாமங்கலத்தில்

மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு. **திண்டுக்கல் சி.சீனிவாசன்** அவர்கள்

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்
திரு. **சேவூர் எஸ்.ராமச்சந்திரன்** அவர்கள்

திரு. **அபூர்வ வர்மா** இ.ஆ.ப
முதன்மை செயலாளர், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை.

டாக்டர். **டி.ஜி.வினய்** இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திண்டுக்கல்

திரு. **எம்.உதயகுமார்**
நாடாளுமன்ற உறுப்பினர்,
திண்டுக்கல்

திரு. **ஆ.சரவணன்** இ.கா.ப.
மாவட்ட காவல் கண்காணிப்பாளர்,
திண்டுக்கல்

டாக்டர். **எஸ்.வினீத்** இ.ஆ.ப.
சார் ஆட்சியர், பழநி

திரு. **இரா.பச்சையப்பன்**
இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை, மதுரை

முனைவர். **மா.வீர சண்முகமணி**
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை

திரு. **ஜி.கார்த்திகேயன்** இ.கா.பு.
காவல்துறை துணைத்தலைவர்,
திண்டுக்கல்

திருமதி. **ந.திருமகள்**
கூடுதல் ஆணையர் (பொது)
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை

tnhrce.org

திருமதி. **மா.கவிதா**
கூடுதல் ஆணையர் (திருப்பணி)
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை

திரு. **இ.பெ.செந்தில்குமார்**
சட்டமன்ற உறுப்பினர், பழநி

திரு. **த.சிவலிங்கம்**
உதவி ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை, திண்டுக்கல்.

மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். தாங்களும் மஹா கும்பாபிஷேக விழா மங்கலத்தில் கலந்து கொண்டு ஸ்ரீ முருகப் பெருமானின் திருவருளை பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்

இரா.மேனகா
உதவி ஆணையர்/நேர்முக உதவியாளர்
துணை ஆணையர், (முழு கூடுதல் பொறுப்பு)

க.இராஜமாணிக்கம்
இணை ஆணையர்/செயல் அலுவலர்/தக்கார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட அன்னதானத்திட்டம் இத்திருக்கோயிலில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

# நிகழ்ச்சி நிரல்

## ஹேவிளம்பி வருடம்

### வைகாசி மாதம் 4-ம் நாள் (18.5.2017) வியாழக்கிழமை

| | |
|---|---|
| காலை 9.00 மணிக்கு | மங்கல இசை, அனுக்ஞை, விநாயகர் பூஜை, சங்கல்பம், புண்யாஹவாசனம், பஞ்சகவ்ய பூஜை, மஹா கணபதி ஹோமம், நவக்கிரஹ ஹோமம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் |
| மாலை 5.00 மணிக்கு | மங்கல இசை, வாஸ்து சாந்தி |

### வைகாசி மாதம் 5-ம் நாள் (19.5.2017) வெள்ளிக்கிழமை

| | |
|---|---|
| காலை 8.00 மணிக்கு | ஸ்கந்த ஹோமம், லட்சுமி ஹோமம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் |
| மாலை 5.00 மணிக்கு | மங்கல இசை, மிருத்சங்கிரஹணம் |

### வைகாசி மாதம் 6-ம் நாள் (20.5.2017) சனிக்கிழமை

| | |
|---|---|
| காலை 7.30 மணிக்கு | மங்கல இசை, அக்நி சங்கிரஹணம் மூர்த்தி ஹோமம், பிரசன்னாபிஷேகம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| மாலை 5.00 மணிக்கு | மங்கல இசை, அங்குரார்பணம், காப்பு கட்டுதல், கும்ப அலங்காரம், கலாகர்ஷணம், யாகசாலை பிரவேசம், முதற்கால யாக பூஜை, திரவியாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, திருமுறை, திருமுறை விண்ணப்பம், ஆசீர்வாதம், பிரசாதம் வழங்குதல். |

tnhrce.org

### வைகாசி மாதம் 7-ம் நாள் (21.5.2017) ஞாயிற்றுக்கிழமை

| | |
|---|---|
| காலை 8.00 மணிக்கு | மங்கல இன்னிசை, திருமுறை பண்ணிசை, விசேட சந்தி, இரண்டாம் கால யாக பூஜை ஆரம்பம், மண்டப பூஜை, வேதிகா பூஜை, திரவியாகுதி |
| காலை 10.30 மணிக்கு | பூர்ணாகுதி, தீபாராதனை, திருமுறை, திருமுறை விண்ணப்பம், மஹா தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| காலை 11.00 மணிக்கு | பரிவார மூர்த்திகளுக்கு அஷ்பந்தன மருந்து சாற்றுதல் ஆரம்பம். |
| மாலை 6.00 மணிக்கு | விசேட சந்தி, மூன்றாவது கால யாக பூஜை ஆரம்பம். |
| மாலை 7.00 மணிக்கு | லட்சுமி பூஜை, திரவியாகுதி |
| இரவு 8.30 மணிக்கு | பூர்ணாகுதி, தீபாராதனை, திருமுறை, திருமுறை விண்ணப்பம், மஹா தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |

### வைகாசி மாதம் 8-ம் நாள் (22.5.2017) திங்கட்கிழமை

| | |
|---|---|
| அதிகாலை 5.00 மணிக்கு | நான்காவது கால யாக பூஜை ஆரம்பம், பிம்ப சுத்தி, காப்பு கட்டுதல், நாடீ சந்தானம், ஸபர்ஸாகுதி, திரவியாகுதி. |
| காலை 7.25 மணிக்கு | பூர்ணாகுதி, தீபாராதனை, யாத்ரா தானம், கலசங்கள் யாகசாலையிலிருந்து விமானம் மற்றும் மூலஸ்தானத்திற்கு எழுந்தருளல். |
| காலை 9.15 மணிக்கு | சபரிவார அருள்மிகு குறிஞ்சியாண்டவர் விமானம் மற்றும் இராஜகோபுரம் சமகால **மஹாகும்பாபிஷேகம்,** |
| காலை 9.25 மணிக்கு | அருள்மிகு குறிஞ்சியாண்டவர் மூலஸ்தான மஹா கும்பாபிஷேகம், மஹா தீபாராதனை, மஹா கும்பாபிஷேக பிரசாதம் வழங்குதல். |
| நண்பகல் 12.00 மணிக்கு | மஹாபிஷேகம், அலங்காரம், மஹாதீபாராதனை, உபசாரம், பிரசாதம் வழங்குதல். **அன்னதானம்** ஆரம்பம் |

பிரதான ஆசார்யர்:
சிவஸ்ரீ. **க.அமிர்தலிங்க குருக்கள்**
ஸ்தவராஜ பண்டிதர் (பொ.)
திருக்கோயில், பழநி.

சர்வ சாதகம்: பழநி அருள்மிகு தண்டாயுதபாணி ஸ்வாமி
தேவஸ்தான அர்ச்சக ஸ்தானீகர்,
சிவாகம சிரோமணி, ஆகம வித்யாரத்னம், சிவாகம கல்பதரு
சிவஸ்ரீ. **அ.செல்வசுப்ரமண்ய சிவாசார்யார்**

அருள்மிகு குறிஞ்சியாண்டவர் திருக்கோயில் ஸ்தல அர்ச்சகர்கள்

வேள்விச்சாலை வழிபாட்டு நேரங்களில் திருமறை, சிவாகமங்கள், திருமுறைகள், முதலியன தொடரோதுதல் நடைபெறும்